DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: செந்தில்குமார் | Father's Name: நந்தகோபால் |
| Village: மல்லப்பள்ளி | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 39 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 29.11.2022.

அ.வ.எண்.**112/2017 -** வா.சா.**1**

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –

01) 2009 ஆம் ஆண்டில் பிழைதிருத்தல் பத்திரம் என்ன காரணத்திற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் முந்தைய பத்திரத்தில் விஸ்தீரண அளவில் 19.5 ஹெக்டேர் என குறிப்பிடுவதற்கு பதிலாக 17.5 ஹெக்டேர் என குறிப்பிடப்பட்டிருந்தது அதற்காக பிழைத்திருத்தல் பத்திரம் ஏற்படுத்தினோம். வா.சா.ஆ.3 பிழைதிருத்தல் ஆவணமானது பட்டாவின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என நான் கூறும் நிலையில், அந்த பட்டாவினை அந்த ஆவணத்துடன் இணைத்து பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளின் சொத்தினை அபகரிக்க வேண்டும் என்பதற்காக தான் பட்டாவை இணைக்காமல் தவறாக வா.சா.ஆ.3 பிழைதிருத்தல் பத்திரத்தை ஏற்படுத்தி கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல.

02) நான் சொல்லும் விஸ்தீரண அளவில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றாலும், அவ்வாறு ஏற்பட்டிருந்தால் அந்த ஆவணத்தை நான் பிழைதிருத்தல் பத்திரத்துடன் இணைத்திருப்பேன் என்றாலும், நான் பொது வண்டிவழிப்பாதையை அபகரிக்க வேண்டும் என்பதற்காக தவறான அளவுகளை குறிப்பிட்டு வா.சா.ஆ.3 பிழைதிருத்தல் பத்திரத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணமான 30.11.2009 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் வழக்கு சொத்திற்கான பட்டாவை இணைக்கவில்லை என்றால் அவர்கள் கேட்கவில்லை அதனால் இணைக்கவில்லை. வா.சா.ஆ.3 பிழைதிருத்தல் பத்திரத்தில் விஸ்தீரண அளவு மட்டுமே திருத்தம் செய்யப்பட்டது என்றாலும், செக்குபந்தி அளவுகள் திருத்தம் செய்யப்படவில்லை என்றாலும் சரிதான்.

03) பொதுவாக ஒரு சொத்து குறித்து ஆவணம் ஏற்படுத்தி பதிவு செய்யும் சமயத்தில் அதற்கான மூல ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் அதுபோன்று மூல ஆவணங்களை கேட்கவில்லை அதனால் நாங்கள் கொடுக்கவில்லை. மூல ஆவணங்கள் இல்லாமல் நாங்கள் வா.சா.ஆ.2, 3 கிரைய ஆவணங்களை ஏற்படுத்திவிட்டோம் என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.2, 3 கிரைய ஆவணங்களை ஏற்படுத்தினோம் என்றால் எங்களுக்கு கிரையம் கொடுத்தவரின் பெயரில் பட்டா இருந்தது அந்த பட்டாவின் அடிப்படையில் கிரைய ஆவணம் ஏற்படுத்தினோம்.

04) வா.சா.ஆ.2, 3 கிரைய ஆவணங்களை ஏற்படுத்திய சமயத்தில் அதன் கிரையதாரருக்கு மூல உரிமை உள்ளதா என்பதை பரிசோதித்து தான் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2, ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள 17.5 ஹெக்டேர் விஸ்தீரணத்திற்கு தான் நான் கிரைய தொகை கொடுத்தேனா என்றால் இல்லை 19.5 ஹெக்டேருக்கு தான் கொடுத்தேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 17.5 ஹெக்டேர் அளவு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் நான் எவ்வாறு 19.5 ஹெக்டேர் சொத்திற்கு கிரைய தொகை கொடுத்திருப்பேன் என்றால் அந்த தவறானது தட்டச்சு பிழையால் ஏற்படுத்தப்பட்டது, அதனால் 19.5 ஹெக்டேருக்கு தான் கிரைய தொகை கொடுத்தேன்.

05) வா.சா.ஆ.3 ஆவணத்தில் தட்டச்சு பிழையால் தான் விஸ்தீரணத்தை தவறாக குறிப்பிட்டிருப்பதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் தவறாக எழுதப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. தட்டச்சு பிழை என்று குறிப்பிட்டு வா.சா.ஆ.3 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் திருத்தல் பத்திரம் ஏற்படுத்துவதற்காக பத்திர எழுத்தரிடம் கொடுத்தோம் அவர் அவரிடம் இருக்கும் வடிவத்தில் இதுபோன்று தயாரித்துள்ளார். வா.சா.ஆ.3 ஆவணத்தில் 19.5 ஹெக்டேர் சொத்திற்கு ஏற்கனவே கிரைய தொகை கொடுக்கப்பட்டுவிட்டது என்பதை குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை, அளவுகள் மட்டுமே மாறியிருப்பதால் அது போன்று சொல்லவில்லை.

06) வா.சா.ஆ.2 ஆவணத்தில் சரியான விஸ்தீரண அளவை குறிப்பிட்டு ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றாலும், பின்னிட்டு வண்டிவழிப்பாதையை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தவறான விவரம் குறிப்பிட்டு வா.சா.ஆ.3 ஆவணத்தைஏற்படுத்திவிட்டோம் என்றால் சரியல்ல. பட்டாவின்படியான வீஸ்தீரணத்தின்படி வா.சா.ஆ.2, 3 ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அந்த ஆவணங்களின் பதிவின்போது பட்டாவை இணைத்து பதிவு செய்திருப்போம் என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல 19.5 ஹெக்டேர் என்ற அளவிற்கு பட்டா ஏற்படவில்லை என்றாலும், 17.5 ஹெக்டேர் என்ற அளவில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றாலும், அதனால் தான் அந்த பட்டாவை நீதிமன்றத்தில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

07) வா.சா,.ஆ.2, 3 ஆவணங்களில் செக்குபந்தி அளவுகள் மாறுபடவில்லை என நான் சாட்சியம் அளித்திருந்தாலும், உண்மையில் இரண்டு ஆவணங்களுக்குண்டான செக்குபந்தி மாறுப்பட்டுள்ளது என்றால் இரண்டிலும் உள்ள செக்குபந்திகள் மாறுபடுகின்றன, வா.சா.ஆ.3 ஆவணமானது வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதாகும். வா.சா.ஆ.3 ஆவணமானது வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது அல்ல என்றாலும், வண்டிவழிப்பாதையை அபகரிக்க வேண்டும் என்பதற்காகவே செக்குபந்தி விவரங்களை மாற்றி வா.சா.ஆ.3 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

08) வா.சா.ஆ.3 ஆவணமானது வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஏற்பட்டுள்ள பிழையை திருத்தம் செய்வதற்கானது என்பதால் வா.சா.ஆ.2 ஆவணத்தின்படியே நான்

வா.சா.ஆ.3 ஆவணத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் பிறந்தது முதலாகவே திருப்பத்தூர் – மல்லப்பள்ளி சாலையானது தார்சாலையாக இருந்து வருகிறது என்றால் சரிதான். தார்சாலைக்கு தெற்கு பக்கத்தில் தான் நான் சொல்லும் வழக்கு சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த சொத்தின் மொத்த அளவு 43 செண்ட் என்றால் சரியல்ல 48 செண்ட் ஆகும்.

09) வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் செக்குபந்தியில் நாகராஜ் நிலத்திற்கு வடக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2005 ல் கிரையம் பெற்ற கிரைய நிலத்திற்கு தெற்கில் நித்தியானந்தம், சஞ்சீவியின் மிகுதி நிலம் இருந்தது என்றால் சரிதான், ஆனால் நாகராஜ் நிலம் கொஞ்சம் தள்ளி உள்ளது பத்திரப்பதிவின்போது கேட்டதற்கு தவறாக சொல்லிவிட்டோம் அதனால் அது பத்திரத்தில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் செக்குபந்தி விவரம் தவறாக குறிப்பிடப்பட்டிருப்பதாக ஒப்புக்கொண்ட நிலையில், அதனை சரிசெய்ய பிழைதிருத்தல் பத்திரம் ஏற்படுத்தவில்லையா என்றால் ஏற்படுத்தவில்லை அதுபோன்று ஏற்படுத்த இயலாது என சொன்னார்கள்.

10) வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழக்கு சொத்தின் தெற்குபக்க செக்குபந்தி விவரம் தவறாக சொல்லப்பட்டுள்ளது என வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை ஆவணங்கள் போதும் என வழக்கறிஞர் சொன்னதால் சொல்லவில்லை. 2005 ஆம் ஆண்டு முதலே வா,சா.ஆ.1 ஆவணம் மூலமாக வண்டிவழிப்பாதையை அபகரிக்க எண்ணி செக்குபந்தியை தவறாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் வடக்கு பக்கம் தார்சாலை என சொல்லியிருக்கிறேனா என்றால் குறிப்பிடவில்லை வண்டிப்பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கம் காணைவழியும், வண்டிவழிப்பாதையும் உள்ளது என்றால் சரிதான்.

11) வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழக்கு சொத்தில் கிழக்கு பக்க செக்குபந்தியாக காணைவழி, வண்டிவழி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை, அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் காணைவழி மட்டும் தான் இருந்தது வண்டிவழி இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 2005 ஆம் ஆண்டு முதலே வண்டிவழியை அபகரிக்க வேண்டும் என்பதற்காக தவறாக செக்குபந்தி குறிப்பிட்டு ஆவணம் பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல, அந்த சமயத்தில் அந்த இடத்தில் வண்டிவழிப்பாதை இல்லை. அதேபோல வா.சா.ஆ.2 ஆவணத்திலும் கிழக்கு பக்கம் காணைவழி, வண்டிவழி இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஏனென்றால் அந்த சமயத்தில் வண்டிவழி இல்லை.

12) எனக்கு எதிராக 1, 2 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.15/2010 என்ற வழக்கினை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அ.வ.எண்.15/2010 வழக்கின் வழக்குரை நகல் வா.சா.ஆ.6 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **என் முன்பு காட்டப்படும் அ.வ.எண்.15/2010 வழக்கில் நான் தாக்கல்**

**செய்த முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 5–வது பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் சரியானதா என்றால் சரியானது. அ.வ.எண்.15/2010 வழக்கின் சாட்சி செந்தில்குமார் தாக்கல் செய்த முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தின் 5 வது பத்தியின் 10 வது வரி முதல் 15 வரி வரையிலான பத்தி பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கம் காணைவழியும், வண்டிவழியும் உள்ளது என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.